**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 168/2019**

2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியாகிய செல்வி இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. P. கனிமொழி, B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி தரங்கம்பாடி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி : | 17.10.2022 | | |
| பெயர் : | செல்வி | கணவர் பெயர் : கண்ணன் | |
| கிராமம் : | பெருமாள்கோவில் 2 ம் தெரு,<br>திருக்கடையூர். | தாலுக்கா | : தரங்கம்பாடி |
| சாதி : | | சமயம்: | |
| தொழில் : | வீட்டுக்குடித்தனம் | வயது | : 48 |

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு சாட்சி–1 ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

08.08.2012 ஆம் தேதியிட்ட வாதியின் தாயார் பார்வதி தாவா 1 வது இனச் சொத்தைப்பொறுத்து வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் வா.சாஆ.1 ஆகும். 19.12.2012 தேதியிட்ட தாவா 2 வது இனச் சொத்தைப்பொறுத்து வாதியின் தாயார் வாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் வா,சா,ஆ.2 ஆகும். 31.07.2012 தேதியிட்ட தாவா 1 வது இனச்சொத்தை பொறுத்து வாதி தாயாரின் பெயரில் நத்தம் அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆகும். 05.11.2012 தாவா சொத்திற்கு வாதியின் பெயருக்கு ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு வா.சா.ஆ.4 ஆகும். 07.11.2012 தேதியில் தாவா 1 இனச்சொத்திற்கு வாதி பெயரில் உள்ள பட்டா உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகும். 14.01.2016 தேதியில் தாவா 1 இனச் சொத்திற்கு

வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரிதிட்ட துாயசிட்டாவின் உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆகும். 14.01.2016 தேதியில் தாவா 1 இனச் சொத்திற்கு வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரிதிட்ட அடங்கலின் உண்மை நகல் வா.சா.ஆ.7 ஆகும். 22.06.2012 தேதியில் தாவா 2 இனச் சொத்திற்கு வாதி செலுத்திய பகுதி ரசீதின் அசல் வா.சா.ஆ.8 ஆகும். 07.10.2015 தேதியில் தாவா 2 இனச் சொத்திற்கு வாதி செலுத்திய பகுதி ரசீதின் அசல் வா.சா.ஆ.9 ஆகும். 19.09.2013 முதல் 08.11.2015 வரை தாவா சொத்திற்கு மின்கட்டணங்கள் செலுத்தியதன் ரசீதுகள் (9 எண்ணிக்கை ) வா.சா.ஆ.10 ஆகும். தாவா சொத்திற்கு 05.02.2015 தேதியில் தாவா சொத்திற்கு வீட்டுவரி செலுத்திய அசல் ரசீது வா.சா.ஆ 11 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசராணை பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.